சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணி – பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் வழங்கும் எம்.பி.இ.எஸ் சான்றிதழ் பட்டம் தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களால் வழங்கப்பட்ட எம்.பி.இ.எஸ் சான்றிதழுக்கு இணையானது என அங்கீகரித்தல் ஆணை வெளியிடப்படுகின்றது.

பள்ளிக் கல்வி(எம்.1)துறை

அரசாணை(நிலை) எண்.98

நாள் 09.05.08
சித்திரை – 27
திருவள்ளுவர் ஆண்டு 2039

படிக்கப்பட்டவை

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடித எண்.1587/ ஆர்.என்.டி.எப்.1/2005, நாள் 20.1.2005.
2. பள்ளிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.54/டி7/2005, நாள் 15.11.05.
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1587/ ஆர்.என்.டி.எப்.1/2005, நாள் 20.12.07.

-----

ஆணை

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் வழங்கும் எம்.பி.இ.எஸ். பட்டச் சான்றிதழ் பெற்ற திரு.டி. கார்த்திகேயன் என்பவர் வேலை வாய்ப்பு அலுவலக பட்டியல்படி நாடுநர் பட்டியலில் இடம் பெற்று தாழ்த்தப்பட்ட வகுப்பினர் முன்னுரிமை அடிப்படையில் நியமனத்திற்குத் தகுதி பெற்றிருந்ததாகவும், அன்னாருடைய பாண்டிச்சேரி எம்.பி.இ.எஸ் பட்டச் சான்று தமிழ்நாடு பல்கலை கழக எம்.பி.இ.எஸ் பட்டச் சான்றுக்கு இணையானது என மதிப்பீடு செய்யப்படாமையால் நியமனம் வழங்கப்படவில்லை எனவும், இதனால் திரு.டி.கார்த்திகேயன் என்பவரால் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு அவ்வழக்கின் தீர்ப்புரையில் 2 வது பிரதிவாதியான தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரால் நான்கு வார கால கெடுவிற்குள் அன்னாரது வெளிமாநில சான்றிதழை மதிப்பீடு செய்து ஆணை பிறப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது எனவும், இவ்வழக்கின் தீர்ப்புரையின் மீதான மேல் முறையீட்டு மனு அரசு வழக்கறிஞரால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை எனவும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார். மனுதாரரின் வழக்கறிஞர் உயர்நீதி மன்ற ஆணையினை அமுல்படுத்தாவிடில் அவமதிப்பு வழக்கு தொடருவதாக தெரிவித்துள்ளார் என தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்து இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அரசினை கேட்டுக் கொண்டுள்ளது.

2. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட எம்.பி.இ.எஸ் சான்றிதழ், அழகப்பா பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் பட்டத்திற்கு இணையானது என்று அப்பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. இதே கருத்தினையே சென்னை பல்கலைக்கழகமும் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழகமும் தெரிவித்துள்ளன.

3. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட எம்.பி.இ.எஸ். பட்டப்படிப்பு, தமிழ்நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் எம்.பி.இ.எஸ். பட்டத்திற்கு இணையானது என்பது குறித்து, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தில் அமைக்கப்பட்டுள்ள பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டது.

4. 17.12.2007 அன்று, இணைக் கல்வித் தகுதி நிர்ணய பரிசீலிப்புக் குழுக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது :-

"M.P.E.S. Degree awarded by Pondicherry University is considered equivalent to M.P.E.S. Degree awarded by the Universities of Tamil Nadu. Further, M.P.E.S. Degree is considered equivalent to M.P.Ed. Degree now awarded by the Universities of Tamil Nadu M.P.E.S./M.P.Ed. Degree awarded by Pondicherry University and Universities of Tamil Nadu are equivalent."

5. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பரிசீலிப்புக் குழுவின் பரிந்துரையை, அரசு தீவிர பரிசீலனைக்குப் பின் ஏற்றுக் கொள்ள முடிவெடுத்துள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் பரிசீலனைக் குழுவின் பரிந்துரையினை ஏற்று, பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் எம்.பி.இ.எஸ். பட்டமானது, தற்போது, தமிழ்நாடு பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் எம்.பி.எட். பட்டத்திற்கு இணையானது எனவும், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு பல்கலைக்கழகங்களால் வழங்கப்படும் எம்.பி.இ.எஸ்./எம்.பி.எட். பட்டங்கள் ஒன்றுக்கொன்று இணையானது எனவும் அரசு ஆணையிடுகிறது. இது குறித்து தமிழ்நாடு பள்ளிக் கல்வி சார்நிலைப்பணிக்கான சிறப்பு/தற்காலிக விதிகளுக்குத் திருத்தம் வெளியிட வேண்டியிருப்பின், உரிய கருத்துருவை உடன் அனுப்புமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம.குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,சென்னை – 6.

<u>நகல்</u>
செயலாளர்,
தமிழ்நாடு அரசுப் பணியாளர்
தேர்வாணையம்,சென்னை–2
பதிவாளர்,
பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்.
பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்த்திருத்தத் துறை (ஆர்),சென்னை–9.
பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்த்திருத்தத் துறை(இ) சென்னை–9.

/ஆணைப்படி/

-/ஒப்/-
பிரிவு அலுவலர்.

30/07/2010
பிரிவு அலுவலர்